**மினுவங்கொடை பிரதேச சபை - 2022**
-----------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மினுவங்கொடை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்று தெரிவித்திருக்கவில்லை. இந்த அறிக்கையின் அபிப்பிராயத்தை மறுக்கும் அடிப்படை பகுதியில் காட்டப்பட்டுள்ள விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் மறுப்பு அபிப்பிராயம் ஒன்றினை வெளியிடுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளும் கணக்காய்வு அடிப்படையில் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையிடுதல் எனவு பொறுப்பாகும். எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் அபிப்பிராயத்தை மறுக்கும் அடிப்படை பந்தியில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் இந்த நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியம இலக்கம் 3.18(இ) பிரகாரம் ரூபா 427,619,015 தொகைக்கான நிலையான வைப்புக்கள் நடைமுறை சொத்துக்கள் என காட்டப்படுவதற்கு பதிலாக நடைமுறை அல்லாத முதலீடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது நாட்குறிப்பின் மூலம் சரி செய்யப்படும் என அறிவிக்கின்றேன். | சரியாக சொத்துக்கள் வகைப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணினி மென்பொருள் மற்றும் பாதைகள், மதகுகள் ஆகிய சொத்துக்களுக்காக ரூபா 18,269,920 தொகை பெறுமானத் தேய்வு கழிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 5,824,005 தொகை மாத்திரம் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 12,445,895 தொகையினால் பெறுமானத் தேய்வு குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வுடன் கலந்துரையாடி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக பெறுமானத் தேய்வு கணிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூபா 5,415,707 தொகை மற்றும் பெற வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி மீதி ரூபா 18,583,712 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீண்டும் பரிசோதனை செய்து சரிசெய்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என. | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவிற்காக அரசினால் | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| மாற்றப்பட்டிருந்த ரூபா 81,711,389 தொகையாக இருந்த போதிலும், அகல்விரிவான வருமானக் கூற்றில் ரூபா 81,372,055 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் சபையின் மொத்த வருமானம் ரூபா 339,334 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் படி 04 கணக்கு மீதிகளில் ரூபா 38,920,917 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | பதிவேடுகளை மீண்டும் பரிசோதனை செய்து சரி செய்யப்பட்டு வருகின்றது என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 15,919,486 தொகை பெறுமதியான 03 கணக்கு மீதிகள், பேரேட்டுக் கணக்குகள் மற்றும் பதிவழித்தலுக்கான சபையின் அங்கீகாரம் என்பன கணக்காய்விற்கு சமரப்பிக்கப்படாமையால் திருப்பிகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | பரிசோதனை மேற்கொண்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என. | கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) ரூபா 15,284,971 தொகைக்கான சபையின் சொத்துக்கள் தொடர்பான பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன், காணிகள் தொடர்பாக காணி உறுதிகள், நில அளவைப் படங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நாளதுவரை ஆக்கல் மற்றும் 2021 ஆண்டு முதல் மீண்டும் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து ஆவணப்படுத்தும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) பிரதேச சபையின் நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான விதி | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | விதி 12(IX) மற்றும் நி.பி. 395 (இ) | 02 அரச வங்கிகளில் பேணப்பட்டு வரும் 02 நடைமுறைக் கணக்குகளுக்காக ஒன்றித்த வங்கி இணக்கக் கூற்றொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | 2023.06.01 திகதி முதல் இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கு மூடப்பட்டு ரூபா 233,258.07 இற்கான தொகை மக்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டது என. | குறிப்பிட்ட விதிக்கு இணங்க வேண்டும். |
| (ii) | விதி 48 | வேலைத் தளங்களில் ரூபா 648,903 தொகைக்கான இருப்பு தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | வருட இறுதி பண்டக் கணிப்பீட்டின் மூலம் பரிசோதனை மேற்கொண்டு பண்டக் கணிப்பீட்டு அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது என. | - மேற்படி - |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் நி.பி. 571 | சபைக்குச் சொந்தமான ரூபா 14,468,973 தொகைக்கான இரண்டு வருடங்களை மிகைத்துள்ள வைப்பு மீதிகளை ஆதனவழிப்புச் செய்திருக்கவில்லை. | வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 24 திகதிய LGD/09/2019(I) இலக்கம் கொண்ட உள்ளூராட்சி சுற்றறிக்கை | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண “பீ” கணக்கின் படிவத்தின் பிரகாரம் ஊழியர் கடன் தொடர்பாக வருடாந்த கடன் எல்லை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன்கள் தொடர்பாக வருடாந்தம் கடன் எல்லை அங்கீகாரம் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக இருக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 257,692,865 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 171,652,556 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 பெப்ரவரி முதல் 2022 ஏப்ரல் வரை கிரடிட் காட் தொடர்பாக பெற வேண்டிய தொகை ரூபா 13,310 தொகையும் மிகையாக கிடைத்திருந்த ரூபா 6,832 தொகையும், இணையத்தின் மூலம் கொடுப்பனவு குறைவாக கிடைத்திருந்த ரூபா 30,072 தொகை | கூடிய விரைவில் இந்த மீதிகள் வங்கி இணக்கக் கூற்றின் மூலம் சரி செய்யப்படும் என. | வங்கியுடன் பரிசோதனை மேற்கொண்டு சரி செய்தல் மீது குறிப்பிட்ட கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மிகையாக கிடைத்திருந்த ரூபா 14,025 தொகை வங்கியினுடன் பரிசோதனை செய்து சரி செய்வதன் மீது குறிப்பிட்ட கணக்குகளை கணக்கீடு செய்தல் மேற்கொண்டிருக்காமையால் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது தொடர்ந்து காட்டப்பட்டு வந்துள்ளது. | | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கிக்கு கிடைத்திருந்த கிரடிட் காட் (தலைமை அலுவலகம்) ரூபா 24,675 தொகை நேர் செலவு என காட்டப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஏப்ரல் 06 திகதி அளவிலும் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூடிய விரைவில் இந்த தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தகவல்களை கண்டறிந்து தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 35,220 | 29,735 | 25,666 | 36,938 | 34,779 | 39,143 | 36,456 | 31,272 |
| (ii) | வாடகை | 1,516 | 1,430 | 1,430 | 603 | 2,586 | 2,693 | 2,516 | 1,079 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,110 | 1,180 | 1,180 | - | 910 | 1,253 | 1,279 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 1,131 | 220 | 692 | 179 | 569 | 682 | 624 | 220 |
| | | 38,977 | 32,565 | 28,968 | 37,720 | 38,844 | 43,771 | 40,875 | 32,571 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறை சொத்துக்களில் முற்கொடுப்பனவு/ முற்பண மீதிகளில் 20 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 784,907 இற்கான மீதியொன்று காணப்பட்ட போதிலும், தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விஷேடத்துவ குழுவொன்று நியமனம் செய்து இந்த மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பல வருட காலமாக செயற்படாமல் காணப்பட்ட ரூபா 233,258 தொகை ஆக்கபூர்வமாக முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகை நிலையான வைப்பொன்று என முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகைப் பணம் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையினால் 2018 ஆண்டு முதல் 3 சந்தர்ப்பங்களில் ரூபா 6,750,000 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு கணினி மென்பொருள் ஒன்று பெற்றிருந்த போதிலும், அந்த மென்பொருளின் மூலம் சபையின் 13 பிரதான கருமங்களுக்கான வசதிகள் பெற்றுக்கொள்ளக் கூடியதான இருந்ததென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த எக் கருமங்களையும் பூர்த்தி செய்து கொள்வதற்கு மென்பொருளின் பங்களிப்பு காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | அனைத்து கருமங்களுக்குமாக ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சபைக்கு மென்பொருள்கள் கொள்வனவின் போது தேவைப்பாட்டினை சரியாக இனங் காண வேண்டியிருந்ததுடன், கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருளை பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | இருப்புக்களை கணக்கீடு செய்யும் போது பொருட் பெறுவனவுப் பத்திரம் (GRN) அடிப்படையாகக் கொண்டு களஞ்சியத்திற்கு கிடைக்கின்ற இருப்புக்களை பதிவதற்கும் பண்ட வெளியிடுதல் கட்டளை (Issue Order) மீது களஞ்சியத்திலிருந்த பண்டங்கள் வழங்குவதற்கும், சரியான விலை முறையின் படி செலவு விடயத்தில் வரவு பதிவு மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் சபையினால் அவ்வாறான கட்டுப்பாட்டு முறைமையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினை சுட்டிக் காட்டப்பட்ட முறையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டின் போது மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 2,000,000 தொகை மற்றும் சபை நிதியத்திலிருந்து ரூபா 4,800,000 தொகை ஆக கூட்டுத்தொகை ரூபா 6,800,000 தொகை செலவிடப்பட்டு தலைமை அலுவலக் கட்டிடத்தில் சூரிய சக்தி முறைமையொன்று பொறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொண்டிருக்காததுடன், செயற்திட்ட அறிக்கையொன்றும் தயாரித்திருக்காததுடன், தேறிய கணக்கீட்டு செய்முறை (Net Accounting) மற்றும் நெட் பிலஸ் முறைமை (Net Plus) இரண்டில் சபைக்கு அனுகூலமான செய்முறை எது என மதிப்பாய்விற்கு ஆளாக்கியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்படுகின்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு சபைக்கு அனுகூலமான செய்முறை எது என மதிப்பாய்விற்கு ஆளாக்க வேண்டும். |
| (ii) | பராமரிப்பு மற்றும் சேவை நிபந்தனைகளும் உத்தரவாத காலமும் உடன்படிக்கையில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சேவைகள் வழங்கிய பின்னர் பராமரிப்புக் காலம் 05 வருடங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. பெறுகை ஆவணத்தின் முதல் பகுதி உடன்படிக்கை ஒட்டப்பட்டுள்ளதுடன், இரண்டாம் பகுதி உடன்படிக்கையில் உட்படுத்துவதற்கு இயலாமல் போனது. | பராமரிப்பு மற்றும் சேவை நிபந்தனைகள் உத்தரவாத காலமும் உடன்படிக்கையில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | 2020, 2021 ஆண்டுகளின் போது மின் உற்பத்தி அலகுகள் 1000 ஐ மிகைத்திருந்த போதிலும் 2022 நவம்பர் முதல் 2022 ஜூலை வரை உற்பத்தி அலகுகள் 400 – 600 அலகுகள் எண்ணிக்கை காணப்பட்டது. 07 வருடங்களை மிகைக்க முன்னர் இவ்வாறு உற்பத்தி மின் அலகுகளின் எண்ணிக்கை குறைவடைவதற்கான காரணத்தை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், சேவைகள் மற்றும் பாரமரிப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றதென அறியப்படவில்லை. | ஸோலா முறைமையை கொள்வனவு செய்யும் நிறுவனம், ஸோலா முறைமையை பரிசோதனை செய்த பின்னர் சூரிய ஒளிப் பெனல் மீது பாசி படிந்திருந்தது என. | மின் அலகுகளின் எண்ணிக்கை குறைவடைவதற்காக காரணம் கண்டறியப்பட வேண்டியதுடன், சேவைகள் மற்றும் பராமரிப்பு அலுவல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ரூபா 6,800,000 இற்கான முதலீடொன்றின் மூலம் 25 வருடங்களுக்கு மின் கட்டணம் செலுத்துவது தொர்பாக எதிர் பார்க்கப்பட்ட குறிக்கோளை நெருங்குவதற்கு முடியாமல் இருந்தது. | இது தொடர்பாக மேலும் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிக்கோளை நோக்கி நெருங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உடுகம்பல நடமாடும் வழித் தளம், தகன கூடம், நீர் வாழ் உயிரின காட்சி சாலை நிர்மாணிக்கும் கருமங்களுக்காக ரூபா 1,314,777 தொகை மற்றும் ஸோலா முறைமை வழங்குவதற்காக ரூபா 4,884,000 தொகை என மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 6,198,477 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக பின்வரும் அதவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | மாதாந்தம் சுமார் ரூபா 8,000 தொகையொன்று சபை வருமானத்திற்கு உழைக்கக் கூடியதாக இருந்த போதும் தேறிய கணக்கீட்டு நடைமுறையின் கீழ் செயற்படுத்தப்பட்டமையால் 2021 செப்தம்பர் முதல் 2022 ஜுலை வரை உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 600 – 500 இடைப்பட்ட வீச்சில் குறைந்த பெறுமானம் ஒன்றே பெற்றிருந்தது. | மேலும் விடயங்களை கண்டறிந்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு வருமானம் ஒன்றை உழைக்கக் கூடியவாறு செயற்பட வேண்டும். |
| (ii) | 02 வருடங்களுக்காக இலவசமாக வழங்கப்படும் பராமரிப்பு மற்றும் சேவை வழங்கல் தொடர்பாக சான்றுகள் காணப்படவில்லை. | உத்தரவாத காலம் முடிவடைந்திருந்தமையால் மீண்டும் சேவை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | பராமரிப்பு மற்றும் சேவை வழங்கல் தொடர்பாக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் கட்டங்களாக சேவை இல்லம் மற்றும் சனசமூக நிலையம் நிர்மாணித்தல் 09 தொகை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | மொத்த கிரய மதிப்பீடு மற்றும் ஆரம்ப வரைபுகள் தயாரிக்கப்படாமல் கட்டிட வரைபுகளுக்கு சபையின் அங்கீகாரம் இன்றியும் நிர்மாண வேலைகள் தொடர்பாக முறையான மேற்பார்வை இன்றி நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இது தொடர்பாக பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | மொத்த கிரய மதிப்பீடு ஆரம்ப வரைபுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் கட்டிட வரைபுகளுக்கு சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு நிர்மாண வேலைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | தொடர்பாக முறையான மேற்பார்வையுடன் நிர்மாண வேலைகள் செய்யப்பட வேண்டும். |
| (ii) | பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் சனசமூக நிலையங்கள் மற்றும் சேவை இல்லங்கள் நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டு 10 வருடங்களை மிகையான காலம் கடந்திருந்த போதிலும், 2022 ஆகஸ்ட் 20 திகதி அளவிலும் அந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் பணம் கிடைக்கக் கூடிய முறையில் விரைவாக விடயங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட காலம் முடிவடைய முன்னர் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 ஆண்டின் போது ரூபா 1,200,000 தொகை மதிப்பீட்டிற்கான தொரனகொட தெற்கு கிராம சேவகர் பிரிவில் இரண்டு மாடிக் கட்டிடம் என சேவை இல்லத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2022 செப்தம்பர் 25 திகதி அளவிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக மொத்த கிரய மதிப்பீடொன்று மற்றும் அடிப்படை வரைபொன்று தயாரித்திருக்காததுடன், கட்டிடத்தின் வரைபும் அங்கீகரிக்கப்படாமல் ரூபா 1,145,446 தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மொத்த கிரய மதிப்பீடு மற்றும் வரைபொன்று தயாரித்தல் முடியாமல் உள்ளது என. | மொத்த கிரய மதிப்பீடு மற்றும் அடிப்படை வரைபு தயாரிக்கப்பட வேண்டியதுடன், கட்டிட வரைபும் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பொதுவான உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நிலையம் ஒன்றிற்கு தேவையான கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 4,072,449 இற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | கட்டிட வரைபு சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் இது தொடர்பாக பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கட்டிட வரைபு சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ii) | Ready mix concrete இற்கு தேவையான SLS 1144 – 1997 சான்றிதழ் சமர்ப்பித்திருக்கவில்லை. | ரேடிமிக்ஸ் கொங்கிரீட்டிற்காக எந்த நிறுவனத்தினாலும் SLS சான்றிதழ் பெற்றிருக்கவில்லை என. | SLS 1144 – 1997 சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பத்தடுவன உப அலுவலகத்தின் இடர் கடன் மீதியில் ஓய்வு பெற்ற ஒருவரின் ரூபா 149,517 இற்கான கடன் மீதியொன்று மற்றும் 04 ஊழியர்களிடம் பெற வேண்டிய ரூபா 24,821 இற்கான அறவிடப்படாத மீதியொன்றும் அடங்கியிருந்தது. | ஓய்வூதியம் செலுத்தும் போது இந்த சபைக்கு அறவீடு செய்து அனுப்புவதற்காக கோறப்படாமை சான்றிதழ் உட்படுத்தப்பட்டுள்ளது என மற்றும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |